செய்தி வெளியீடு எண்: 824 நாள்: 20.06.2024

செய்தி வெளியீடு

# மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மெத்தனால் அருந்தி சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்கள்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (20.06.2024) கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மெத்தனால் அருந்தி சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

உடன் மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அரசு செயலர் திருமதி.கே.அமுதா இ.ஆ.ப, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் திரு.பிரதீப் யாதவ், சிறப்பு திட்ட செயலாக்க அரசு செயலாளர் மரு.தரேஷ் அகமது இ.ஆ.ப, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் திரு.ம.கோவிந்தராவ் இ.ஆ.ப, மாவட்ட ஆட்சியர் திரு.எம்.எஸ்.பிரசாந்த், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தே.மலையரசன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வசந்தம்.க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தா.உதயசூரியன் ஆகியோர் உடனிருந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரத்தில் 19.06.2024 அன்று மெத்தனால் அருந்திய நபர்கள் தொடர்ந்து கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கிணங்க, உயர்தர மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டது. மருத்துவர்களின் பரிந்துரையின் பெயரில் சில நபர்கள் மேல்சிகிச்சைக்காக சேலம், விழுப்புரம், பாண்டிச்சேரி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன. இதில், எதிர்பாராத விதமாக சிகிச்சை பலனின்றி இறந்த நபர்களுக்கு உடற்கூராய்வு உடனடியாக மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டது.

மேலும், இம்மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற உடனே மருத்துவமனைக்கு வருகை புரிந்து, சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு மருத்துவ

உதவிகள், கூடுதல் மருத்துவர்கள், போதிய மருந்துகள் இருப்பதை உறுதி செய்துள்ளனர். தொடர்ந்து, சிகிச்சையில் இருப்பவர்கள் மருத்துவ குழுக்களால் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தொடர்ந்து, கருணாபுரத்தில், சிகிச்சை பலனின்றி உயிர் இழந்த நபர்களின் இல்லத்திற்கு சென்று அவர்களது உடலிற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மேலும், உயிரிழந்த நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தலா ரூ.10 இலட்சம் நிவாரண உதவித்தொகையினை உயிரிழந்தவர்களின் 27 குடும்பத்தினரிடம் நேரில் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.சங்குமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.நா.சத்தியநாராயணன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.புவனேஷ்வரி பெருமாள், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் (பொ) மரு.நேரு, இணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) (பொ) மரு.செந்தில்குமார், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.ராஜா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu